## பயிற்சிகள்

### அ. கோடிட்ட இடங்களை நிரப்புக:

9I6H4P

1. பேரண்டம் உருவாகக் காரணமான நிகழ்வு------------

2. இரு வான்பொருட்களுக்கு இடையிலான தொலைவை அளக்க உதவும் அளவு----ஆகும்.

3. சூரியக் குடும்பத்தின் மையம் -------

4. கோள் என்ற வார்த்தையின் பொருள் -----------

5. அதிக துணைக்கோள்களைக் கொண்ட கோள் ----------

6. நிலவிற்கு அனுப்பப்பட்ட முதல் இந்திய விண்கலம்---------

7. புவியின் சாய்வுக் கோணம் -------

8. நிலநடுக்கோடு சூரியனை நேராகச் சந்திக்கும் நாட்கள் ---------- மற்றும் ---------

9. சூரிய அண்மை நிகழ்வின் போது புவி சூரியனுக்கு ------------- ல் காணப்படும்.

10. புவியின் மேற்பரப்பின் மீது ஒளிபடும் பகுதியையும், ஒளிபடாத பகுதியையும் பிரிக்கும் கோட்டிற்கு ------------- என்றுபெயர்.

### ஆ. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க

1. புவி தன் அச்சில் சுழல்வதை இவ்வாறு அழைக்கிறோம்

   அ) சுற்றுதல் ஆ) பருவகாலங்கள்

   இ) சுழல்தல் ஈ) ஓட்டம்

2. மகரரேகையில் சூரியக்கதிர்கள் செங்குத்தாக விழும் நாள்

LIVEWORKSHEETS

அ) மார்ச் 21 ஆ) ஜூன் 21

இ). செப்டம்பர் 23 ஈ) டிசம்பர் 22

3. சூரியக்குடும்பம் அடங்கியுள்ள விண்மீன் திரள் மண்டலம்

அ) ஆண்டிரோமெடா

ஆ) மெகலனிக்கிளவுட்

இ) பால்வெளி

ஈ) ஸ்டார்பர்ஸ்ட்

4. மனிதன் தன் காலடியைப் பதித்துள்ள ஒரே விண்பொருள்

அ) செவ்வாய் ஆ) சந்திரன்

இ) புதன் ஈ) வெள்ளி

5. எந்த கோளால் தண்ணீரில் மிதக்க இயலும்?

அ) வியாழன் ஆ) சனி

இ) யுரேனஸ் ஈ) நெப்டியூன்

## இ. பொருந்தாததை வட்டமிடுக.

1. வெள்ளி, வியாழன், நெப்டியூன், சனி
2. சிரியஸ், ஆண்டிரோமெடா, பால்வெளி, மெகலனிக்கிளவுட்
3. புளூட்டோ, ஏரிஸ் , செரஸ், அயோ
4. வால்விண்மீன், சிறுகோள், விண்வீழ்கல், குறுளைக் கோள்கள்
5. தரை ஊர்தி, சுற்றுக்கலம், வானூர்தி, விண்கலம்

## ஈ. பொருத்துக

1. வெப்பமான கோள் – செவ்வாய்

2. வளையம் உள்ள கோள் – நெப்டியூன்

3. செந்நிறக் கோள் – வெள்ளி

4. உருளும் கோள் – சனி

5. குளிர்ந்த கோள் – யுரேனஸ்

LIVEWORKSHEETS

உ(*i*) கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்க.

1. வெள்ளிக் கோள் கிழக்கிலிருந்து மேற்காகச் சுற்றுகிறது.
2. ஜுன் 21 ம் நாளன்று கடகரேகையில் சூரியக் கதிர் செங்குத்தாக விழும்.
3. செவ்வாய்க் கோளுக்கு வளையங்கள் உண்டு.

மேற்கூறிய கூற்றுகளில் சரியானவற்றைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்திக் கண்டறிக

அ) 1 மற்றும் 2 ஆ) 2 மற்றும் 3

இ) 1,2 மற்றும் 3 ஈ) 2 மட்டும்

(*ii*) கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்க

*கூற்று 1:* புவி, நீர்க்கோளம் என அழைக்கப்படுகிறது.

*கூற்று 2:* புவி தன் அச்சில் சுழலுவதால் பருவ காலங்கள் ஏற்படுகின்றன.

சரியான கூற்றினை தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

இ) இரண்டு கூற்றுகளும் சரி

ஈ) இரண்டு கூற்றுகளும் தவறு.

ஊ. பெயரிடுக

1. விண்மீன்களின் தொகுப்பு……………
2. சூரியக் குடும்பத்திற்கு அருகில் உள்ள விண்மீன் திரள் மண்டலம்……………
3. பிரகாசமான கோள்……………
4. உயிரினங்களை உள்ளடக்கிய கோளம்……………
5. 366 நாட்களை உடைய ஆண்டு……………

LIVEWORKSHEETS